

# மத்தேயு சுவிசேஷமும், வேத பாடமும்.

விற்பனைக்கு அல்ல - இலவசம்

*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப் படும். (மத்தேயு 6:33)*

**All scriptures are taken from the Tamil Bible with permission from the Bible Society of India.**

சரித்திரம் 1:

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு



மத்தேயு 1:18 – 25

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது, அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து. அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர்தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.

யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

## செய்ய வேண்டியவைகள்

அ. தனிக்கேள்விகட்கு விடப்பட்ட இடத்தில் பதில் எழுதவும். பதில் தெரியவில்லையென்றால், மறுபடியும் மேலே கொடுக்கப்பட்டதை வாசிக்கவும். உங்கள் பதில் மேலே அடங்கியுள்ளது.

1. இயேசு கிறிஸ்துவின் தாயாரின் பெயர் என்ன? ________________________
2. இயேசு கிறிஸ்து __________________________ உற்பத்தியானார்?
   இது எதை வெளிப்படுத்துகிறது என்றால் இயேசுவுக்குத் தேவன் பிதாவாயிருக்கிறார். எப்படியென்றால் பரிசுத்த ஆவியானவரும் தேவனும் ஒருவர். (யோவான் 5:7 வாசிக்கவும்)
3. யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானதென்று

*சொப்பனத்தில் சொன்னது யார்?*

4. *இயேசுவிற்கு இன்னொரு பெயர் கொடுக்கப்பட்டது அது 'இ' என்று தொடங்கு கிறது. அது என்ன?*
5. *இம்மானுவேல் என்றால் என்ன?*

*ஆ. வசனத்தைக் கற்க:*

*இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங் களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். (மத்தேயு 1:21)*

## இயேசு கிறிஸ்து மட்டும் நம்மைப் பாவங்களிருந்து விடுவிக்கிறவர்.




*இயேசு கிறிஸ்து உலக முறைமை யின்படி தகப்பன் இல்லாதவர் பரிசுத்த ஆவியா னவரே பிதாவானவர். நம்முடைய பாவங்களுக் காக ஜீவபயாகத் தம்முடைய பரிசுத்த இரத்தத் தைச் சிலுவையிலே சிந்தி ஒரு தரம் மரித்தார். அவர் பாவமும், மாசும் இல்லாதவர். பரிசுத்தமும், நீதியும் உண்மையுமுள்ளவராய் இருக்கிறபடியால் நம்மை இரட்சிக்க இந்த உலகத்திற்கு வந்தார். அதனால் அவரை இரட்சகர் என்று அழைக்கி றோம்.*

*இயேசு கிறிஸ்துவே தேவன் -*

*அவர் மனுஷ சாயலாக வந்தார்.*

சரித்திரம்: 2 – சாஸ்திரிகள் இயேசுவை தரிசித்தல்



மத்தேயு 2ஆம் அதிகாரம்

*ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கி ருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்தி ருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவ ருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந் தோம் என்றார்கள்.*

*ஏரோது ராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடு கூட எருசலேம் நகரத்தார்*

அனைவரும் கலங்கினார்கள். அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து; கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள்; யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்: யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக் குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து: நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல், அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்.



ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.

அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துக்கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

அவர்கள் போனபின்பு, கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு; ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்கு ஓடிப் போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

அப்பொழுது ஏரோது, தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு மிகுந்த கோபமடைந்து, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரிகளிடத்தில் திட்டமாய் விசாரித்த

காலத்தின்படியே பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வய துக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலைசெய்தான்.

புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமா விலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல் லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று.

ஏரோது இறந்தபின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்ப னத்தில் காணப்பட்டு, நீ எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் இறந்து போனார்கள் என்றான். அவன் எழுந்து பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தான். ஆகிலும், அர்கெலாயு தன் தகப்பனாகிய ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாளுகிறான் என்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான். அப்பொழுது, அவன் சொப்பனத்தில் தேவ னால் எச்சரிக்கப்பட்டு, கலேயா நாட்டின் புறங்களிலே விலகிப்போய், நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம் பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

### சாஸ்திரிகள் பணிந்து கொண்டார்கள்

இரண்டாம் அதிகாரத்தில் சாஸ்திரிகள் இயேசுவைப் பணிந்து வணங்கினார்களே தவிர அவர்கள் மரியாளை அல்ல, மரியாள் உலக முறைப்படித் தாய், இயேசு சிலுவை யில் மரிக்கும் முன்பு அவர் தம் உலகத்தாயாகிய மரியாளை யோவான் இடத்தில் ஒப்ப டைத்தார் என்று (யோவான் 19-26,27)ல் வாசிக்கிறோம். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும், அருகே நின்ற அன்பா யிருந்த சீஷனையும் கண்டு, தம்மு டைய தாயை நோக்கி, ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி அதோ, உன் தாய் என்றார். நாம் இங்கு கவனிப்போம், அவர் தாய் என்று அழைக்காமல், ஸ்திரீ என்று அழைத்ததினால் நாம் அதி ஜாக்கி ரதையாக இருந்து கர்த்தரும், இரட் சகருமாகிய அவரையே சேவித்து வணங்கி ஆராதனை செய்யக்கட வோம். மற்ற எந்த விதமான விக்கிரக ஆராதனையோ, மனித முறைப்படி வழி பாடுகளையோ, பின்பற்றாமல்



முதல் 1ம் அதிகாரத்தில் (23-ல்) வாசித்தோம். இம்மானுவேல் என்றால் கர்த்தர் நம்மோடி ருக்கிறார். ஆதலால் இயேசு கிறிஸ்து தேவனாகவே இருக்கிறார். இயேசு இந்த உலகத் தில் அவதரித்ததே ஒரு அதிசயமானது. அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார். (யோவான் 1: 1,14) (கொலோ 2:9) மத்தேயு (12:50) வாசிக்கவும்.

## சரித்திரம் 3: இயேசு கிறிஸ்து யோவான்ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெறுதல்



மத்தேயு 3:1–6, 13–17

அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே, இந்த யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது.

அப்பொழுது, யோவானால் ஞானாஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடைசெய்து; நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்.

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது, தேவ ஆவி புறவைப்போல் இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

## செய்ய வேண்டியவைகள்

சரியான வாக்கியங்களைக் கொண்டு பூர்த்தி செய்.

பதில் 3ஆம் அதிகாரத்தில் காண்க.

1. மனந்திரும்புங்கள் ________________ இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது.
2. யோவானுக்கு ______________ காட்டு __________ ஆகாரமாயிருந்தது.
3. ஞானஸ்நானம் பெறுவதற்கு யோவானிடம் கேட்டது யார்?
4. இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திருந்து கரையேறியவுடனே தேவ ஆவியானவர் _______________ப் போல அவர்மேல் இறங்கினார்.
5. வானத்திருந்து ஒரு சத்தம் உண்டாகி இவர் என்னுடைய நேச ______________ இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

## மனம் திரும்புதல் என்றால் என்ன?

மனம் திரும்புதல் என்றால் நாம் செய்த பொல்லாத காரியங்களுக்கு மனஸ்தாபப் பட்டு இப்பேர்பட்டவைகளைச் செய்வதில்லை என்று விட்டுவிடுவதும் நல்ல காரியங்களைச் செய்வதென்று இருதயத்தில் தீர்மானிப்பதுமே மனந்திரும்புதல் ஆகும்.



அநீதியெல்லாம் பாவமே. கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்கள் எல்லாம் பாவமே. மனந்திரும்புதல் என்பது உள் இருதயத்திலே ஒரு மாறுதலை உண்டாக்கும். ஒரு சிறுமி சொன்னாள், மனந்திரும்புதல் என்றால் மனஸ்தாபப்பட்டுப் பாவங்களை அறிக்கை செய்தல் என்று, நாம் இயேசுவிடம் ஜெபிக்கும்போது அவர் வல்லமையால் உதவி செய்வார். அவர் நம் பாவ இருதயத்தை மாற்றி சுத்த இருதயத்தையும் அருளுவார். அவர் நம் பாவங்களையும் நீக்கித் தம்முடைய பரிசுத்த ஆவியை நம் இருதயத்தில் தந்தருளுவார். நீ இதற்கு முன்பு எப்போதாகிலும் கர்த்தராகிய இயேசுவை நோக்கி என் இருதயத்தில் வாரும் என்று அழைத்ததுண்டா? இந்தச் சிறுமி இயேசுவிடம் தன் பாவங்களை அறிக்கை செய்தும் ஜெபித்தும் தான் செய்த கெட்ட காரியங்களுக்காகவும் வருந்தி ஜெபித்தாள். இயேசு அவள் ஜெபத்தைக் கேட்டு பாவத்தை மன்னித்தார். நல்ல காரியங்களைச் செய்ய உதவியும் சுத்த இருதயத்தையும் தருவார். அவரிடம் நாம் தினம் ஜெபிக்கும்போது அது பெலன் தந்து அவருக்குப் பிரியமானதைச் செய்ய பெலன் தரும்.




*எதிர்பாராத சாட்சி*

*தேவன் தம்மை விசேஷித்த ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவே கிறிஸ்து என்று காண்பித்தார்.*

*1. பிதாவாகிய தேவன் வானத்திருந்து உரைத்ததாவது, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்.*

*2. தேவ குமாரனாகிய இயேசு யோவான் ஸ்நானனிடம் ஞானஸ்நானம் பெற்றார். நம்மை பாவங்களிருந்து இரட்சிக்க, தேவன் மானிட ரூபத்தில் இயேசுவாக வந்தார்.*

*3. தேவன் பரிசுத்த ஆவியாக வானத்திருந்து புறாவைப் போல அவர் மேல் தங்கினார். நம் மேல் காட்டிய அற்புதமான அன்பைத் தேவன் மூன்று தன்மைகளில் தம்மை வெளிப்படுத்தினார்.*

**சரித்திரம் 4: இயேசுவைப் பிசாசானவன் சோதித்தல்**



மத்தேயு 4:1–11

*அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

*அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும், ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாரா திருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.*

*மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

*அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான். உடனே தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.*

*உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. மத்தேயு (4:10)*

### ***பிசாசுக்குக் கீழ்ப்படியாத இயேசு***

*பிசாசானவன் இயேசுவை அவனுக்குக் கீழ்ப்படியும்படிச் செய்ய முயற்சி செய்தான். ஆனால், அவரோ பிசாசின் சத்தத்தை அறிவார். இவனுக்கு மற்றொரு பெயர் உண்டு. 4ஆம் அதிகாரத்தில் சாத்தான் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. தம்முடைய வல்லமையைத் தவறான முறையில் உபயோகிக்க சாத்தான் முயற்சி செய்தான், இது தான் சோதனை, இந்தச் சோதனைகளை இயேசு ஜெயித்தார். அவர் பாவம் செய்யவில்லை. அவனுடைய மூன்று சோதனைகளில் ஒன்றுக்கும் கீழ்ப்படியவுமில்லை. இவ்விதமாகச் சாத்தானை ஜெயித்தார். இயேசுவைப் பிசாசானவன் பணிந்து கொள்ளும்படிக் கேட்டான். அதனால் நாம் பிசாசையோ வேறு எந்தத் தெய்வங்களையோ வணங்கக்கூடாது. அப்படிச் செய்வது மகா பாவம், தவறு. பிசாசின் வார்த்தைக்கு அவர் செவி கொடுத்திருந்தால், இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகி இருக்கலாம். அவரோ, உலகத்தின் ஐசுவரியத்தைத் தேடவில்லை. பிதாவின் சித்தத்தைத் தேடினார். நாமும் பாவத்தின் மூலமும், பொல்லாத வழிகளிலும் நாம் பணக்காரராகாதபடி அதாவது திருட்டு, ஏமாற்றுதல், நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மறுதத்தல் மூலம் (இதன் விளைவாக) பணக்காரராவதைவிட ஏழையாக வந்தார். அதனால் நமக்கு ஒரு நிச்சயம் உண்டு. அவர் நித்திய ஜீவனை நமக்குத் தருவார். ஒரு நாள் நாமெல்லோரும் அவருடன் சதாகாலங்களிலும் இருப்போம். (1 கொரிந்தியர் 8:9) அவர் நமக்களித்த பெலத்தையும், சரீரத்தையும் தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. ஒழுங்கு சட்டதிட்டத்தின்படியும், இயற்கையின்படியும் உடலைப் பேணிக் காக்க*

வேண்டும். உன் சரீரத்தை சுத்தமாகவும், பத்திரமாகவும் காக்க வேண்டும். இயேசு கிறிஸ்து முன் மாதிரியாக இருந்தார். அவர் உப்பரிகையின்மேல் இருந்து குதிக்க வில்லை, நாமும் கூட நம்முடைய சரீரத்துக்கு தீங்கோ, கேடோ விளைவிக்காதபடிக் காத்து நடக்க வேண்டும்.

## இயேசு கிறிஸ்து உபயோகித்த இரகசியம்

இயேசுவைத் தப்பான காரியங்களைச் செய்ய தூண்டின போது அவர் தேவ வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆதலால் நீங்களும், நானும் செய்ய வேண்டியதாவது: நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேதம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் அதை வாசிக்கும்போது நம்மைத் தேவ வல்லமையினால் நிரப்பி பிசாசானவனை மேற்கொள்ள வேத வசனங்களைத் தெரிந்திருக்க வேண்டும். நமக்குச் சோதனைகள் வருவது பாவம் அல்ல, நாம் அந்தப் பாவங்களுக்குட்படும் போது அது பாவமாகும். வேதமும், பாவமென்று கூறுகிறது. (எபிரயேர் 4-15). இயேசுவும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டவாராய் இருந்தாலும், பாவத்திற்கும், பிசாசிற்கும் கீழ்ப்படியவில்லை.

## நினைவில் கொள்ளவும்.

உனக்கு ஏதாவது பொல்லாத காரியங்களையோ, பாவங்களையோ செய்யும்படிச் சத்தமோ அல்லது நினைவோ ஏற்பட்டாலும் அது சாத்தானால் உண்டான சத்தம். அதற்குச் செவிசாய்க்க வேண்டாம். இப்படிச் செய்ததினால் இயேசுவைப் பிசாசானவன் விட்டோடியது போல உங்களையும் விட்டோடுவான்.

## சரித்திரம்: 5, இயேசு ஊழியர்களைத் தெரிந்து கொள்ளுதல்



மத்தேயு 4:17 – 22

அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

இயேசு கலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயாவும், கடல் வலைபோட்டுக் கொண்டிருக்கிற போது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்.

அவர் அவ்விடம் விட்டுப் போகையில், வேறெ இரண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும், அவன் சகோதரன் யோவானும் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிருந்து, தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிற

போது, அவர்களைக் கண்டு, அவர்களையும் அழைத்தார். உடனே அவர்கள் படவையும் தங்கள் தகப்பனையும் விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்.

ஆ. வசனத்தைக் கற்க.

*இயேசு இந்த சகோதரர்களைப் பார்த்து என்ன சொன்னார்? என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.*

**இயேசுவைப் பின்பற்ற ஓர் உன்னத அழைப்பு**

இயேசு தம்மைப் பின்பற்றி வாருங்கள் என்று அழைத்தபோது, மீன் பிடிக்கிறவர்களாகிய இவர்கள் கீழ்ப்படிந்து இயேசுவுக்கு மனிதரைப் பிடிக்கிறவர்களாக சந்தோஷத்துடன் சென்றார்கள். வலையைக்கொண்டு மீன் பிடித்துக் கொண்டு இருந்த இவர்கள் இப்போது இயேசுவுக்கு மனிதர்களைப் பிடிக்கிறவர்களானார்கள். இயேசு தம்மைப் பின் பற்றி அநேகர் வரும்படி விரும்புகிறார். இதை வாசிக்கிற உம்மையும் அவரைப் பின்பற்றி வரும்படி அழைக்கிறார். நீர் இயேசுவைப் பின்பற்றியதுண்டா? இல்லையென்றால், ஏன்? இதுவரை நீர் சிந்தியாமலும், இப்பேர்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிறீர். அவரைப் பின்பற்றுவாயாகில் உனக்கு நித்திய ஜீவன் உண்டே. (யோவான் 14-6 வசனத்தில்) அதற்கு இயேசு நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார்.

## சரித்திரம்: 6, கிறிஸ்து எதை உபதேசித்தார்



மத்தேயு 5:1–12

அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்,

1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.
3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.
4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
7. சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.
8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.
9. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழி களையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்க ளாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.

## இரக்கமுள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

ஒருநாள் ஒருவர் பயங்கரமான ஒரு நாட்டில் பிரயாணம் சென்ற போது கால் அடிப்பட்டிருந்த ஒரு நாயைக் கண்டார். அந்த மனிதர் கொஞ்ச நேரங்கழித்து அந்த நாயின் காலைப் பார்த்தபோது ஒரு முள்ளை அதனுடைய கால் கண்டார். வெகு ஜாக்கிரதையாக அந்த முள்ளை எடுத்து அதன் காலைக் கழுவித் தன் கைக் குட்டையினால் கட்டினார். பிறகு அந்த நாய் தன் வழியே போயிற்று. சில நாட்கள் கழித்து இந்த மனிதனை இந்திய காட்டுமி ராண்டிகள் கொல்வதற்காக சிறைப்பிடித்து சிறையில் வைத்தார்கள். திடீரென்று அந்த இந்திய காட்டுமிராண்டிகளின் தலைவனின் நாய் ஓடி வந்து அவரு டைய கைகளை நக்கி அதனுடைய அன்பையும், நன்றியையும் காட்டியது. அந்த இந்தியத் தலைவன் இதைக் கண்டபோது இந்த நாய் இந்த மனிதனால் காப் பாற்றப்பட்டது என்று அறிந்து அதற்காக நன்றி செலுத்தி அந்த மனிதனை விடுதலை செய்தான்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார் கள் என்று 6ஆம் சரித்திரத்தில் ஒன்பதுவிதமான ஆசீர்வதிக்கப்படுகிறவர்களைப் பற்றி நாம் வாசித்தோம். இவர்களை நாம் துன்பப்படுகிறவர்கள் என்று அழைப் போம். தேவன் நமக்குப் பத்து கற்பனைகளைக் கொடுத்திருந்தாலும் இயேசுவோ நமக்கு 9விதமான பாடுகளாகிய ஆசீர்வாதங்களைக் கூறினார். (வெளி 22:14) படி மற்றொரு ஆசீர்வாதத்தையும் நமக்கு வைத்திருக்கிறார். ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிர வேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படிச் செய்கிறவர்கள் பாக்கியவான் கள்.

## சரித்திரம்: 7, இயேசு எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைக் கற்பித்தார்.

அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது மாயக்காரரைப்போருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளிலும்



மத்தேயு 6:5 –15

சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்; அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள்கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென் என்பதே. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரம பிதா உங்களுக்கு மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

**A.** நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைக் கீழே ஜெபத்தில் காணலாம். அதில் சில வாக்கியங்கள் விடப்பட்டிருக்கின்றன. அவற்றை 7ஆம் சரித்திரத்தில் வாசிக்கலாம்.

### விடப்பட்ட இடத்தில் பூர்த்தி செய்.

____________________ருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் ______________யிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ______________ இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் _______________ மன்னியும். எங்களை சோதனைக்

குட்படப்பண்ணாமல் ______________னின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராஜ்யமும், ______________________________ என்றென்றைக்கும் உம்முடையவை களே, ஆமென் என்பதே.

## அ. இந்த ஜெபத்தைக் கற்க

இந்த ஜெபம் முன் மாதிரியாகவும், வழி நடத்துதலாகவும் இருக்கிறது. உங்களை சரியான வழியில் நடத்தவும் அநேக காரியங்களை அறியவும் இந்த ஜெபம் உதவு கிறது.

1. நம்முடைய பிதாவானவர் பரலோகத்தில் இருக்கிறவர், அவர் நமக்குப் பிதாவாக வும், நம்மை சிருஷ்டித்தவரும் நம்மை நேசிக்கிறவருமாகவும் இருக்கிறார்.

2. அவர் நாமத்தை சர்வ சாதாரணமாக உபயோகிக்கக்கூடாது. அவருடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

3. நாம் அனைவரும் தேவனுடைய சித்தம் பரலோகத்தில் நிறைவேறுவதாகவும் அதே போல் தேவனுடைய சித்தம் பூமியில் நிறைவேற வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். அப்படி நாம் செய்வோமாகில் இந்த உலகம் எவ்வளவு மாறுபட்டதாயி ருக்குமே?

4. நாம் பிதாவிடத்தில் நம்முடைய தேவைகளையும் நம்முடைய எல்லாப் பிரச்ச னைகளையும் தெரியப்படுத்தினால் நம்முடைய தேவைகளை எல்லாம் சந்திப் பார். நமக்கு வேண்டிய ஆகாரத்தையும் நம் தேவைகளை நம்முடைய எல்லாப் பிரச்சனைகளையும் நீக்கவும் நம் ஜீவியத்தில் உதவி செய்வார்.

5. மற்றவர்களை மன்னிப்பது; இயேசு நம்மை எவ்வளவாய் மன்னித்தாரோ அவ்வள வாய் மற்றவர்களையும் மன்னிப்போம். நம்முடைய இருதயத்தில் கசப்பு, கோபம், வெறுப்பு, வைராக்கியம், பழி வாங்குதல் இருந்தால் தேவன் நம்மையும் மன்னி யார், உண்மையாக நாம் மற்றவர்களின் குற்றங்களை மன்னிக்கும்போது நம்முடைய குற்றங்களையும் தேவன் மன்னிப்பார்.

6. தேவன் சர்வ வல்லமை உள்ளவர். எல்லா சோதனைகளிலும், பொல்லாங்கு களிலும் இருந்து நம்மை விடுவிக்கிறவர்.

7. தேவன் எல்லாம் செய்ய வல்லவர். இராஜ்ஜியமும், வல்லமையும் மகிமையும் உள்ளவர்.



மத்தேயு 6:25 –34

*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதும் இல்லை அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்பட்டுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?*

*உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?*

*ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று கலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும். ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.*

*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33)*

## சரித்திரம்: 9, தேவன் நமக்கு அருளும் நன்மையான ஈவுகள்



மத்தேயு 7:7 –12

*கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?*

*ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.*

### *மேலே கொடுக்கப்பட்ட வசனத்தின் பாடம்*

1. *பிதாவானவர் பரலோகத்தில் இருக்கிறார். அவரையே நோக்கி ஜெபிக்க வேண்டும்.*

2. *பரலோகத்தில் பிதாவின் அன்பானது பூலோகத்தில் தாய், தந்தையரின் அன்பை விட மிகப்பெரியது. ஆதலால் அவர் நமக்கு நல்ல ஈவுகளையும், எது நன்மையாகத் தோன்றுகிறதோ அதையும் அருளுகிறார்.*

3. *தேவனை உண்மையாகத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிப்பார்.*

4. *வேத போதகமானது இந்தப் பெரிய சத்தியத்திற்குள் வழி நடத்துகிறது. மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ அப்படியே*

நாமும் செய்ய வேண்டும். மற்றவர்கள் என்றால் உயிர் வாழும் மனிதவர்க்கம், அதாவது உன் சொந்த இனத்தானை அல்ல.

### திறவுகோலான இந்த வசனத்தைக் கற்க

இதைத் தங்கப் பிரமாணம் என்று அழைப்போம். ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (மத்தேயு 7:12)

### உங்களையே கேட்கவேண்டிய ஒரு நல்ல கேள்வி

இந்தத் தங்கப் பிரமாணத்தை உங்கள் வாழ்க்கையில் பின்பற்ற தங்களுக்குள் திடம் இல்லை என்றால் அல்லது ஒரு அயலனையோ, நண்பனையோ, விரோதியையோ எப்படி நடத்துவது என்று தங்களுக்குத் தெரியாவிட்டால், கீழ்க்குறித்துள்ளவாறு தங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்; அவருடைய ஸ்தானத்தில் நான் இருந்ததால் எனக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று எனக்குள் நான் விரும்புவதாகும். இதற்கு உண்மையான, நேர்மையான பதில் உன் இருதயத்தில் வருமானால் நீ அதைச் செய். அப்போது நீ இந்தத் தங்கப் பிரமாணத்தைப் பின்பற்றியவனாவாய்.

## சரித்திரம்: 10, இருவிதமான கட்டிடக்காரர்கள்



மத்தேயு 7:24–29

ஆகையால், நான் சொல்ய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை; ஏனென்றால், கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்ய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணன் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது என்றார். இயேசு இந்த வார்த்தைகளைச் சொல் முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவருக்குப்

போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

### செய்ய வேண்டியவைகள்

கீழேயிடப்பட்ட இடத்தில் 10வது சரித்திரத்தில் உள்ள சரியான வார்த்தையைக் கொண்டு பூர்த்தி செய்க.

1. இயேசுவின் வார்த்தையை கேட்டு அதன்படிச் செய்கிறவன் அவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின ______________ புள்ள மனுஷனாவான்.
2. ஒருவன் இயேசுவின் வார்த்தையைக் கேட்டும் அதன்படிச் செய்யாதவன் எவனோ அவன் தன் வீட்டை மணல்மேல் கட்டின ______________ யில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.

### புத்தியுள்ள கட்டிடக்காரன்

நீங்களும் நானும் புத்தியுள்ளவர்களாக வேண்டுமானால் இயேசுவின் வார்த்தையைக் கேட்டு அதன்படிச் செய்யவேண்டும். வேதத்தில் இயேசுவின் வார்த்தைகளைக் காணலாம். நாம் இப்பொழுது படித்துக் கொண்டிருக்கும் பரிசுத்த மத்தேயுவில் இயேசுவின் வார்த்தைகளைக் காண்கிறோம். இப்பொழுதும் நம்முடைய ஜீவியத்தை இயேசுவின் வார்த்தையின்மேல் கட்டி அவரைப் பின்பற்றுவோமாகில் அப்போது நாம் காக்கப்படுவோம். புயல், சோதனை, போராட்டங்கள், கஷ்டங்கள், துக்கங்கள் எல்லாம் வரும்போது அவற்றை எல்லாம் நாம் தாங்கிக்கொள்ள அவர் கன்மலையாய் இருப்பதனால் அவன் நம்பிக்கையோடு அசையாமல் நிற்பான். நம்முடைய அஸ்திபாரத்தை இயேசுவின்மேல் போடுவோமானால் நம்மை அசையாதபடி காத்துக் கொள்வார். நீங்கள் புத்தியுள்ள மனுஷனாகவே இருக்க வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவுக்கு உன் இருயத்திலும், உன் ஜீவியத்திலும் இப்போதே இடம் கொடு. அவரிடம் உன்னைத் தாழ்த்தி ஜெபம் செய். உன் இருதயக்கதவைத் திற. இப்போதே அவர் உனக்குள் வருவார்.



### ஜெபம்

ஆண்டவரே, என் பாவங்களை மன்னித்து, என்னை சுத்திகரியும் என்று ஜெபிக்கிறேன். செய்வதற்கும், சொல்வதற்கும் அனுதினம் என்னோடு இருந்து என்னை வழி நடத்தும். இயேசு சொன்னார். இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் தன் சத்தத்தைக் கேட்டு, கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே



போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணு வான். (வெளி 3:20)

**புத்தியில்லாத கட்டிடக்காரர்கள்**

சிலர் தேவ வார்த்தைக் குக் கீழ்ப்படிய மாட்டார்கள். ஆனால் சிலர் தேவ வார்த்தைக ளைக் கேட்டு அதை மறந்து விடு வார்கள். இவர்களோ புத்தியில்லாத மனுஷராவர். வாழ்க்கையில் புயல் வந்ததும் அவர்கள் நிற்கமுடியாமல் மணன்மேல் கட்டப்பட்ட வீட் டைப்போல் ஆவார்கள். இது அதி மோசமானது. அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தம் இருதயத்தில் கொள்ளாமலும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப டியாமலும் இருக்கிறார்கள்.

**சரித்திரம்: 11, காற்றோடே கடலும் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தன**

அவர் படவில் ஏறினபோது அவ ருடைய சீஷர்கள் அவருக்குப் பின் சென்று ஏறினார்கள். அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத்தக்க தாய்க் கடல் பெருங்காற்று உண்டா யிற்று. அவரோ நித்திரையாயிருந்தார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே, எங்களை இரட்சியும், மடிந்து போகி றோம் என்றார்கள். அதற்கு அவர்: அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகி றீர்கள் என்று சொல்: எழுந்து, காற் றையும் கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டா யிற்று. அந்த மனுஷர்கள் ஆச்சரியப் பட்டு: இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படி கிறதே என்றார்கள்.



மத்தேயு 8:23–27

### கடலும் புயலும்

இயேசுவும் சீஷர்களும் ஒரு பெரிய படகில் ஏறிச்சென்றார்கள். அப்பொழுது களைப்பினால் இயேசு நித்திரையிருந்தார். அவர் நித்திரையிருந்தபோது ஒரு பெரிய புயல் அலைகளினால் தண்ணீரில் படகு அமிழும் போல் இருந்தது. இயேசு அவர்களுடன் இருந்தும் சீஷர்கள் பயந்து இயேசுவை எழுப்பினார்கள். இதைக்கண்ட இயேசு அவர்களைக்குறித்தும் அவர்கள் அவிசுவாசத்தைக் கண்டும் அதிர்ச்சியுற்றார். அப்பொழுது இயேசு காற்றையும் கடலையும் பார்த்து அமைதலாயிரு, இரையாதே என்றார். அலையும் கடலும் அமைதலாயிற்று, அப்பொழுது சீஷர்கள் உணர்ந்தார்கள். இங்கு ஒருவர் உண்டு அவர் எல்லா மனிதரிலும் விசேஷித்தவர் என்றும் மெய்யாகவே, இவர் தேவனுடைய குமாரன் என்றும் காற்றும், கடலும் இவருக்குக் கீழ்படிகின்றனவே என்றும் வியந்தார்கள்.

### நினைவில் இருக்க வேண்டியவைகள்

சில வருடங்களுக்கு முன் ஒரு தாயும் அவளின் இரண்டு சிறிய குமாரத்திகளும் கப்பல் பிரயாணம் செய்தார்கள். அப்பொழுது ஏதோ ஒன்று கப்பலுக்கு நிகழ்ந்தது. அப்பொழுது கப்பல் மூழ்க ஆரம்பித்தது. அதில் இருந்தவர்கள் அனைவரும் பயப்பட்டார்கள். ஆனால் அந்தத் தாயும் இரண்டு குமாரத்திகளும் இயேசுவை நேசித்தவர்களாயும், நம்பிக்கை உள்ளவர்களாயும் இருந்தார்கள். அவளுடைய பெரிய மகள் தன் தாயிடம் சொன்னதாவது: அம்மா, கடலும் அவருடையது அதை அவர் உண்டாக்கினார். அதனால் நாம் அமிழ்ந்து போவதைக் குறித்து பயமில்லை, நாம் அவருடைய பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டவர்களும் அல்ல என்று சொல் மலர்ந்த முகத்துடன் மரணத்தை சந்தித்தார்கள். என் அன்புள்ள நண்பனே, இதை நீ உன் கவனத்தில் வை. இயேசு நம்முடன் இருக்கும்போது நம்மை ஒரு தீங்கும் அணுகாது.

## சரித்திரம்: 12, நாம் இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும்.



மத்தேயு 10:28 –33

ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள். அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால்,

*பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்ளாயிருக்கிறீர்கள்.*

*மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண் ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதப்பேன்.*

## இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுவது அவசியம்

*இயேசு கிறிஸ்து நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார், என்னை மனித ருக்கு முன்பு அறிக்கை செய்தால், அவரும் பரலோகத்தில் பிதாவுக்கு முன்பாக நம்மை அறிக்கை பண்ணுவார். இது ஒரு அதிசயமானது. அவரை அறிக்கை செய் வது என்றால், இயேசுவுக்காக நின்று நாம் சொல்வதைக் கிரியையினாலும், செய் கையினால் அவரைக் குறித்தும், அவர் வல்லமையினால் நம்மைப் பாவத்திருந் தும் விடுதலை பெறச் செய்து இரட்சித்ததையும் இன்னும் உனக்குச் செய்ததையும் சொல் அவரை இவ்விதமாக மனிதர்களுக்கு முன்பு அறிக்கை செய்யவேண்டும். இந்த விதமாக நாம் இயேசுவை அறிக்கை பண்ணவேண்டும். நாம் இயேசுவைக் குறித்துச் சொல்ல வெட்கப்படுவோமாகில் அவர் செய்ததைச் சொல்லும்படிச் சொல் லும் செய்யாதிருந்தால் நம்முடைய ஆண்டவரை நாம் மனுஷர் முன்பாக மறுத க்கிறோம். இது பெரிய மோசமான செயலாகும். இது இயேசுவினுடைய இருதயத் திற்கு விசனத்தை உண்டாக்கும். நாம் இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டோம். அவரி டத்தில் விசுவாசம் வைத்து அவருடைய உதவியைக் கேட்கும் பொழுது அவர் பார் வைக்குப் பிரியமானதைச் செய்ய உதவி புரிவார். அவர் நம்மைக் குறித்து பரலோ கத்தில் பிதாவிடம் நம்மை மறுதக்க மாட்டார்.*

## நாம் மனிதனுக்குப் பயப்படதேவையில்லை

*சில மனிதர் பொல்லாதவர்களாயும், பயங்கரமானவைகளைச் செய்கிற வர்களாயும் சில வேலைகளில் மனிதர்களைக் கொலை செய்பவர்களுமாக இருக்கி றார்கள். ஆனால் அவர்கள் சரீரத்தை மட்டும் அழிக்க முடியும் அவர்கள் ஆத்து மாவைக் கொல்லவோ அழிக்கவோ முடியாது. ஆத்துமா என்பது நம் சரீரத்தில் ஒரு பாகமானது. அது ஒருபோதும் அழியாதது, சாகாதது. நம்முடைய சரீரம் நாம் சாகும் போது நம்முடைய ஆத்துமா தம்மைத் தந்தவரிடம் அதாவது தேவனிடம் போகிறது. அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (எபிரெயர் 9:27) நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு முன்பு நம்முடைய செய்கையின்படி கணக்குக் கொடுக்கவேண்டும். (ரோமர் 14-12) சொல் லப்பட்டபடி நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்குக்*

கொடுப்பான். ஆதலால் அவர் தேவனாயிப்பதால் நாம் தேவனுக்குப் பயப்படுவோம். பிரசங்கி சொல்கிறார் (12:13, 14ல்) தேவனுக்குப்பயந்து அவர் கற்பனைகளைக் கைக் கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். ஆண்டவர் சொன்னார்; இந்த மனுஷர்க ளுக்குப் பயப்படவேண்டாம். மனிதன் என்ன செய்யக்கூடும், அவர்கள் உங்கள்மேல் பொய்யாய்ப் பல குற்றங்களைச் சாற்றலாம். உங்களைத் துன்புறுத்தி கொலை செய்ய லாம். இருப்பினும் தேவன்மேல் விசுவாசம் உள்ளவர்களை அறிந்தும் இருக்கிறார். உங்களுடைய தலைமுடி முதலாய் எண்ணப்பட்டிருக்கிறது. அவர் எல்லாம் அறிந்த வர். இந்தச் சிறிய பறவையாகிய அடைக்கலான்குருவி பிதாவின் சித்தம் இல்லா மல், அவைகளில் தரையிலே ஒன்று கூட விழுவதில்லை. நாமோ இந்த அடைக் கலான் குருவிகளைவிட விசேஷித்தவர்கள். அவர் நம்மை மறப்பதில்லை என்று (எபிரேயர் 13:5ல்) சொல்லப்பட்டிருக்கிறது. அவர் உன்னை விட்டு விலகுவதுமில் லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.

## இந்த வசனத்தைக் கற்க

அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அதன்படிச் செய்கிறவர்களாயும் இருங்கள். (யாக்கோபு 1:22)

## சரித்திரம்: 13, விதைக்கிறவனுடைய உவமைகள்

இயேசு அன்றையத்தினமே வீட்டிருந்து புறப்பட்டுப்போய், கடலோரத் தில் உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் பட வில் ஏறி உட்கார்ந்தார். ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள். அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்; கேளுங்கள், விதைக் கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில் சில விதை வழி யருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது. முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது. சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாக வும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள் ளவன் கேட்கக்கடவன் என்றார்.

ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள். ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன்



மத்தேயு 13:1 – 9, 18 – 23

*இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான். அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய் கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருப்பான், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான், முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக் கேட்கிறவனாயிருந்து, உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான், நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.*

*உவமை என்றால் என்ன?*

*உவமையானது ஒரு சிறிய கதையின் மூலம் சத்தியத்தை விளக்குதல்.*

*கேள்வி: **மேற்சொன்ன உவமைகளில் நீர் எத்தகையவராய் இருக்கிறீர்?***

*இப்பொழுது நீர் நல்ல நிலத்தில் விழுந்த விதைகளைப் போல் இல்லையென்றால் இப்பொழுதே, இயேசுவிடம் ஜெபியுங்கள். அவரை உங்கள் இருதயத்தில் அழையுங்கள். அப்போது நீங்கள் அதிகக்கனிகளைக் கொடுக்க உதவி செய்வார்.*

**சரித்திரம்: 14, சிலுவையும், கிரீடமும்** *(மத்தேயு 16:24-28)*

*அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான், மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

## ஒவ்வொருவனுக்கும் ஒரு சிலுவை



நீங்கள் இயேசுவைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னை வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவைப் பின்பற்றக்கடவன். இயேசு, உனக்காகவும், எனக்காகவும், அவருடைய மகிமையும், மாட்சிமையும்,பரலோகத்தில் விட்டு நம்மை மரணத்திருந்தும், நரகத்திருந்தும் இரட்சிக்க சிலுவையில் நமக்காக அநேகபாடுகள் பட்டார். (எபிரெயர் 12:2) அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆம், இயேசு மறுபடியும் பரலோகத்திற்குப் போனார். நீயும் நானும் மகிமை சந்தோஷத்தில் இருக்க வேண்டுமென்று (யோவான் 14:3ல்) சொல்லுகிறார். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். தன்னைத்தான் வெறுக்கும்படி சொன்னதற்கு அர்த்தம் என்ன? மற்றவர்களுககுப் பிரயோஜனமாயிருக்க முன் வர வேண்டும். ஒரு வேளை இயேசு கேட்கலாம் பணம் இல்லாதவர்களிடம் உங்கள் பணத்தைக் கொடுத்து சுவிசேஷத்தை அறிவிக்கவும், வேதம் இல்லாதவர்களிடம் தேவ செய்தியும், ஆகாரம் இல்லாமலும், வியாதியாயும் இருக்கிறவர்களுக்கு ஆகாரமும், வியாதியாய் இருக்கிறவர்களுக்கு ஜெபிக்கும்படியும் உனக்கு அவசியமான தேவையான பொருள் வேண்டியதாயிருப்பினும், அதை நீ வாங்காதபடி அதை ஏழைக்கும், பட்டினியாய் இருக்கிறவர்களுக்கும் கொடு என்பார். இயேசு உங்களை உலகத்தில் எல்லாப் பாகங்களுக்கும் போய் அங்குள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றிச் சொல் என்பார். சில நேரங்களில் அவர் கேட்கலாம். அனாதி பிள்ளைகள் தாய், தகப்பன் இழந்தவர்களை எடுத்து வளர்த்திடு. இயேசுவுக்காகத் தம்மை வெறுத்து அவருக்காக ஊழியம் செய்ய எத்தனையோ வழிகள் உண்டே!

### உன் ஆத்துமா இந்த உலகத்தைவிட விலையேறப் பெற்றது.

பணக்காரன் ஆவதற்கு ஒருவன் உழைத்து செல்வந்தனாக இந்த உலகத்தில்

*ஆகலாம். ஆனால் நீ இயேசுவில் அன்பு கூராமலும் அவரைப் பின்பற்றி அவர் இரட்சகர் என்று விசுவாசிக்காமலும் இருக்கிற நீ கிரியை இல்லாத மதியீனனாவாய்.*



*நீ ஆத்துமாவை இழந்தவனும் அதை மறுபடியும் திருப்பிப் பெறாத நித்திய ஜீவன் இல்லாதவனுமாவாய். மனிதன் தன் ஆத்துமாவுக்காக எதைக் கொடுப்பான். மனிதன் தேவனைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தங்களையும் குடும்பத்தையும் பிரியப்படுத்தி இந்த விதமாகத் தம் ஆத்துமாவுக்கு பெரியவராகக் காண்பித்து திருப்தி அடைகிறார்கள். பொல்லாதவர்களுக்கு உலகமும் அதன் இச்சைகளும் தான் அவர்களின் இராஜ்ஜியம். இயேசு கிறிஸ்துவை விட்டு நம்மைப் பிரித்து விடாதபடி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாதிருப்போம்.*

*இந்த வசனத்தைக் கற்க (மத்தேயு 16:27)*

*"மனுஷ குமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தியவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத்தக்தாக அவனவனுக்குப் பலனளிப்பார்."*

## சரித்திரம்: 15, இயேசு இந்த சிறியவர்களை நேசிக்கிறார்.



மத்தேயு 18:10–14

*இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் என் பரம பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார்.*

*உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால் அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்*

போய்ச் சிதறிப்போனதை தேடாமருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால் சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக் குறித்துச் சந்தோஷப்படுகிற தைப் பார்க்கிலும் அதைக் குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக இந்தச் சிறியரில் ஒருவனா கிலும் கெட்டுப்போவது பரலோகத்திருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.

## இந்தக் கதை நமக்கு எதைக் கற்பிக்கிறது

இந்தச் சிறியவர்களுக்குப் பரலோகத்தில் தேவ தூதர்கள் உண்டு. இந்தத் தூதர்கள் பரலோகத்தில் தேவனுடைய முகத்தைத் தரிசிக்கிறார்கள். ஆகையால் சிறு பிள்ளைகளை நாம் எப்படி கவனிக்கிறோம் என்பதில் கவனம்வேண்டும். நாம் பிள்ளைகளுக்கு நன்மையைச் செய்ய கற்றுக் கொடுக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவுக்கு மற்றொரு பெயர் மனுஷகுமாரன் என்பது, தேவக்குமாரன் என்றும் அழைக்கப்பட்டார் மனுஷ குமாரன் என்று அழைப்பது ஏனென்றால் அவர் ஒரு கன்னி மரியாளிடம் பிறந்ததினால் அவரை தேவ குமாரன் என்றும் அழைப்பதுண்டு ஏனென்றால் தேவன் இவருக்குப் பிதாவாக இருக்கிறார்.

கிறிஸ்து இந்த உலகத்தில் வந்த நோக்கம் இழந்து போனதை இரட்சிக்கவே. ஒரு மனிதன் காணாமல் போன தன் ஆட்டைத் தேடுவதுபோல, அவ்விதமாய் இயேசு கிறிஸ்து நம்மைத்தேட வந்தார்.



ஒரு மனிதன் காணாதுபோன தன் ஆட்டைக் கண்டடைந்த பின்பு சந்தோஷப்பட்டு களி கூருவதுபோல இயேசு கிறிஸ்துவும் நம்மை அவரிடம் காணும்போது களி கூறுகிறார்.

இயேசுவுக்குள் நம்பிக்கையும், இனிமையுமான விசுவாசமும் உள்ள பிள்ளைகள்மேல் மிகவும் பிரியமாயிருக்கிறார். இப்பேர்ப்பட்ட அருமையான பிள்ளைகளை ஒன்றைக்கூட இழந்திட அவருக்குச் சித்தமில்லை. இவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே.

இது எவ்வளவு அவசியமானதென்று தெரியவில்லையா? இயேசுவே நம் எல்லோரையும் வழி நடத்துவதற்கு, நன்மைக்கு நன்மை செய்ய வேண்டிய ஜனங்கள் அதற்கு பதிலாக தீமையைச் செய்கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்கும் இதைத்தான் செய்தார்கள். அப்படியிருப்பினும், தம்மை விரோதித்தவர்களுக்காகவும் ஜெபித்தார்.

பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். (லூக்கா 23:34)

## இயேசு, சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வர விடுங்கள் என்றார்

அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டு வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு விசனமடைந்து; சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல், அவர்களை அணைத்துக் கொண்டு அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.



மாற்கு 10:13 –16

## சரித்திரம்: 16, நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்

அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து; ஆண்டவரே என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்துவந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதர மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரம் மாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன். எப்படியெனில் பரலோக ராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவனகணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து, வணங்கி; ஆண்டவனே! என்னிடத்



மத்தேயு 18:21 –35

தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்.

அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப் போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து; நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது, அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலே விழுந்து, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக் கொண்டான். அவனோ சம்மதியாமல்போய் அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவல் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து; பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக் கொண்டபடியினால் அந்தக்கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல், அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.

## இந்தக் கதையானது அநேகக் காரியங்களைப் போதிக்கிறது.

இந்த அனுபவமானது ஏழு எழுபது தடவை மன்னிப்பது என்றால் இந்த மன்னிப்புக்கு முடிவே கிடையாது.

ஒரு வேலைக்காரன் தன் இராஜாவிடம் ஆயிரம் வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தான். ஒரு தாலந்து என்றால் அது ஒரு பெரிய தொகையாகும். அந்த வேலைக்காரன் பத்து ஆயிரம் கடன்பட்டு இருந்தான். இராஜாவுக்கு இந்தக்கடனைத் திரும்பிக் கொடுக்க நிர்வாகமில்லாமல் இருந்தது அவனுக்கு.

வேலைக்காரன் தன் இராஜாவைப் பார்த்து என்மேல் பொறுமையாயிரும். நான் எல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுவேன் என்று வேண்டிக் கொண்டான். இதைக் கேட்ட இராஜா மனதுருகி, அவன் கடனை மன்னித்து விட்டான்.

அந்த வேலைக்காரன் வெளியே வந்து தன்னிடம் கடன் பட்டவனைப் பார்த்து இரக்கமற்றவனாய் நான் கொடுத்த நூறு வெள்ளிப் பணத்தை கொடு என்றான். இச் சிறு தொகையான நூறு பணம் ரோமர் பணத்தில் அவ்வளவு அதிகமல்ல. அவன் அவனுடைய கழுத்தை நெருக்கிக் கடனை கொடுக்கும்படிக் கேட்டான். ஆண்டவர் நாம் செய்பவை எல்லாவற்றையும், நம்முடைய கிரியைகளையும் காண்கிறார். முதல் வேலைக்காரனிடம் இராஜா காட்டிய இரக்கம் அன்பு ஆகியவைகளை இவன் காட்டவில்லை. இரக்கமற்றவனாய் நடந்துகொண்டான்.

முதல் வேலைக்காரன் இந்த ஏழை மனிதனிடம் இரக்கம் அன்புகாட்டாமல்

*அவனைச் சிறையில் இட்டுக் கடன் தீருமட்டும் வைத்தான். அவன் அதிகக் கஷ்டப்பட்டிருப்பான். தான் கடன் கொடுக்கும் வரையில் தனக்கு கடினமான நேரமாகவும் எப்படி இந்தச் சிறையில் இருந்து கடனை கொடுப்பேன் என்றும் கவலைப்பட்டிருப்பான்.*

*இந்த இரக்கமற்ற கிரியைகள் இராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபோது, இராஜா அதிகக் கோபமுள்ளவராய் அவனைக் கண்டபோது, எவ்வளவு இரக்கம் இல்லாத வேலைக்காரன் என்று அறிந்தார். இவனை எப்படி மன்னித்தேனோ அந்த விதமாகத் தன்னிடம் கடன்பட்ட அவனை இவன் மன்னிக்க வேண்டாமோ!*

*இந்தப் பொல்லாத வேலைக்காரன் அவனை மன்னிக்கவில்லை; அதனால் இராஜா கடன் தீருமட்டும் அவனைச் சிறையிட்டான்.*

*இயேசு சொல்லுகிறார்; இந்த விதமாக உங்களுக்குச் செய்யப்படும், நீங்களும் மற்றவர்களை மனப்பூர்வமாய் மன்னிக்கவில்லை என்றால்,*

*கர்த்தருடைய வார்த்தையின்படி (ரோமர் 3:23ல்) நாம் எல்லோரும் பாவிகள், எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி நம்முடைய பாவங்களுக்காக கடன் செலுத்த முடியாமருக்கிறோம். நாம் எல்லோரும் தேவனுக்கு முன்பாக சுத்தமுள்ளவர்களும் அல்ல, அதனால் இயேசு உண்மையும், பரிசுத்தமும், பாவமில்லாதவருமாக இருந்து நமது பாவங்களுக்கு அவர் சிறையில் மரித்து, பாவமில்லாத இரத்தத்தினால் நம்மை விடுதலையாக்கினார். (1 யோவான் 3ல்) சொல்லப்படுகிறது. அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை.*

*ஆதலால் கர்த்தராகிய இயேசு நம் பாவங்களை மன்னித்து நம்மிடத்திருந்த பாவத்தை குலைத்துப் போட்டார். அவர் விரும்புகிறார் நாமும் மற்றவர்களுடைய குற்றத்தை மன்னிக்கவேண்டும் என்று இந்த விதமாக மன்னிக்கும்போது நம்முடைய குற்றங்களை மன்னித்து நம்மை விடுதலை செய்தவராகிய தேவனுக்கு நம் இருதயத்தில் நன்றி கூருவோம்.*

## சரித்திரம்: 17, துக்கமடைந்த ஐசுவரியவான்

*அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி: எவைகளை என்று கேட்டான். அதற்கு இயேசு: கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக,*



மத்தேயு 19:16 –26

பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான்.

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அதைக்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு; அப்படியானால், யார் இரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள். இயேசு, அவர்களைப் பார்த்து மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்.

**கீழுள்ள கேள்விகளுக்கு ஆம் அல்லது இல்லை என்றும் பதில் எழுதவும்.**

இயேசு வாபனைப் பார்த்து நீ பூரண சற்குணனாய் இருக்க விரும்பினால் உனக்கு இருக்கிறதை விற்று தரித்திரருக்குக் கொடு என்றரா? ______________________ ________________________________________

இந்த வாபன் தன் பணத்தை ஐசுவரியவான்களுக்கு கொடுத்தானா? ____________________________

இயேசு ஐசுவரியவானான வாபனைப் பார்த்து என்னைப் பின்பற்றி வா என்று கூறினாரா? ______________________________________________________

இந்த வாபன் இயேசுவைப் பின்பற்றிச் சென்றானா? ____________________

இந்த வாபன் சந்தோஷமுடன் திரும்பிச் சென்றானா? __________________

சரித்திரம் 18: கிறிஸ்து தமக்கு சமபவிக்கிறதை முன்னதாகவே ***சீஷர்க***ளுக்கு அறிவித்தார்



மத்தேயு 20:17–19

இயேசு எருசலேமுக்கு போகும்போது, வழியிலே பன்னிரண்டு ***சீ***ஷரையும் தனியே அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்: மனுகூஷகுாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்: அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் ***தீ***ர்த்து, அவரைப் பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்: ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.

பொல்லாத மனிதர்களைக் குறித்தும் அவர் தாம் சிலுவையில் அறையப்படுமுன் தமக்கு நிகழப்போவதை முன் அறிவித்தார். ***சீ***க்ஷர்களிடம் அவர் சொன்னதாவது: இந்த விதமாக நிறைவேறவேண்டியதாக இருக்கிறது. இந்தவிதமாகப் பாவத்திலிருக்கிற நம்மை இரட்சிக்க வேண்டியதாயிற்று.

சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷ குமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். நாம் ஒவ்வொருவரும் நன்றி செலுத்தக் கடன்பட்டு இருக்கிறோம். கிறிஸ்து நம்மெல்லாருடைய பாவங்களுக்காக மரித்தார். எந்த நாட்டைச் சேர்ந்தவன் என்றோ, அவனுடைய நிறம் என்ன என்பதோ கேள்வி அல்ல. அவர் எல்லோருக்காகவும் மரித்தார் (யோவான் 3: 14–15)

தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, அவர் சிலுவையில் என் பாவங்களுக்காக என்னை இரட்சிக்க மரித்தார் என்று ***நீ*** விசுவாசித்தால் உனக்கு நித்திய ஜீவன் உண்டு. தேவன், அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16)

சரித்திரம் 19: கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்பட்டார்.

(மத்தேயு 27:11–26)

இயேசு தேசாதிபதிக்கு முன்பாக நின்றார்: தேசாதிபதி அவரை நோக்கி: ***நீ*** யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: ***நீ***ர் சொல்லுகிறபடிதான் என்றார். பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் குற்றஞ் சாட்டுகையில், அவர் மறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது, பிலாத்து அவரை நோக்கி: இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, ***நீ*** அவைகளைக் கேட்கவில்லையா என்றான். அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை: அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.

காவல் பண்ணப்பட்டவர்களில் எவனை விடுதலையாக்க வேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொள்வார்களோ, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குவது பண்டிகைதோறும் தேசாதிபதிக்கு வழக்கமாயிருந்தது. அப்போது காவல் பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான். பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து, அவர்கள் கூடியிருக்கையில், அவர்களை நோக்கி: எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ என்று கேட்டான். அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: ***நீ***ர் அந்த ***நீ***திமானை ஒன்றும் செய்ய வேண்டாம்: அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள். பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவைக் கொலைசெய்விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள். தேசாதிபதி ஜனங்களை நோக்கி: இவ்விருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரபாசை என்றார்கள். பிலாத்து அவர்களை நோக்கி: அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான. அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள். தேசாதிபதியோ: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அதற்கு அவர்கள்: அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று எல்லாரும் சொன்னார்கள். தேசாதிபதியோ: ஏன், என்ன பொல்லாப்புச் செய்தான் என்றான். அதற்கு அவர்கள்: அவனைச் சிலுவையில் அறையவேண்டும் என்று அதிகமதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள். கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்***ணீ***ரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த ***நீ***திமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன். ***நீ***ங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள். அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.

சரித்திரம்: 20, இயேவுக்கு முள்முடியினால் ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது.


மத்தேயு 27:27–30

அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரண்மனையிலே கொண்டு போய், போர்ச்சேவகரின் கூட் டம் முழுவதையும் அவரிடத் தில் கூடிவரச் செய்து, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப் பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிர சின்மேல் வைத்து, அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங் காற் படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவ ரைச் சிரசில் அடித்தார்கள்.

## கிறிஸ்து எப்படி நடத்தப்பட்டார்?

இந்தப் பொல்லாத மனிதர்கள் இயேசுவுக்கு எதிராய்ப் பயங்கரமான காரி யங்களைச் செய்தார்கள், நாம் கூட கிறிஸ்துவிற்காக நிற்கும்போது நமக்கும் உலகத் திலே இந்தப் பாடுகள் உண்டு. பொல்லாதவர்களாகிய இவர்கள் தேவனில் அன்பு கூர மாட்டார்கள். நல்லவர்களாக ஜீவிக்கிறவர்களையும் அவர்கள் நேசிப்பதும் இல்லை, (யோவான் 15ம் அதிகாரம் 18-20ல்) இயேசு சொன்னார்: உலகம் உங்களைப் பகைத் தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங் கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங் கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திருந்து தெரிந்து கொண்டாடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்ப்பப்படுத்துவார்கள்.

இயேசு கிறிஸ்து அதிசயமான ஒன்றை உங்களுக்கு வைத்திருக்கிறார். (யோவான் 16-33ல்) என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்தி ரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.




*மத்தேயு 27: 31-38, 50-54)*

*அவரைப் பரியாசம் பண்ணின பின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டு போனார்கள். போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள். கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது கசப்பு கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார். அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*

*அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந் தார்கள். அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக் கும்பொருட்டு, இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள். அப்பொழுது அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவ ருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடுகூடச் சிலுவை களில் அறையப்பட்டார்கள்.*

*(மத்தேயு 50:54) இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக் கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறை களும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்த பின்பு, இவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப் பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள். நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமி அதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.*

*இயேசுவின் வலது பக்கத்தில் ஒருவனும், இடது பக்கத்தில் ஒருவனும் சிலுவையில் அறையப்பட்டவர்கள் யார்? ______________________________*

*நூற்றுக்கு அதிபதியும் அவனோடிருந்த ஜனங்கள் அனைவரும் இயேசு வைப் பார்த்துக் கொண்டிந்தபோது பூமி அதிர்ச்சியைக் கண்டு அவர்கள் சொன்ன தாவது இயேசு ______________________________ என்றார்கள்.*

**சரித்திரம்: 22, இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.**

*சாயங்காலமான போது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீ ரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியி ருந்த தன்னுடைய புதிய கல்லறையில் அதை வைத்து, கல்லறையின் வாசல் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப்போனான். அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிரே உட்கார்ந்திருந்தார்கள்.*



மத்தேயு 27:57 – 66

ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடி வந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல் சேவகர் உண்டே: போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்.

## யோசேப்புக்கு கிறிஸ்துவிடம் இருந்த அன்பு

யோசேப்பு என்பவன் ஒரு பெரிய பணக்காரன், அவன் இயேசுவை அதிகமாக நேசித்து வந்தான். அவர் மரித்த போது அவரைத் தன் சொந்தக் கல்லறையில் வைக்கவேண்டும் என்று திட்டம் பண்ணினான். அவனுடைய அன்பு நிறைந்த ஆண்டவரின் சரீரம் இளைப்பாற ஒரு விசேஷித்த இடத்தை ஆயத்தம் செய்தான். இயேசுவின்மேல் இருக்கும் உண்மையான அன்பானது சுயநலமற்றது. அன்பானது எதையும் பகிர்ந்து மற்றவர்களுக்கு உதவிசெய்ய வழிகளை வகுத்துக் கொள்ளும். நீ இயேசுவை நேசிக்கிறாயா? அப்படியானால் அவருக்கு ஊழியம் செய்ய எந்த வழியைக் கடைப்பிடித்திருக்கிறாய்? அவருக்காக நீ என்ன செய்தாய்?

இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவியத்தை வெறுமையாக்கினார் அல்லது கீழ்ப்படுத்தினார்.

இயேசு கிறிஸ்து தம்மை வெறுமையாக்கித் தம் சித்தத்தின்படி பாவங்களிருந்து உன்னையும், என்னையும் இரட்சித்தார். அவர் தம் பரிசுத்த இரத்தத்தை நம் பாவங்களுக்காகச் சிந்தினார். (எபிரெயர் 9:22)ல் சொல்லுகிறபடி இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ் சிந்துதலல்லாமல் மன்னிப்பு உண்டாகாது.

இயேசு கிறிஸ்து பரிபூரண ஜீவாதார பயாக இருக்கிறார். அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை (யோவான் 1:29ல்) சொல்யபடி இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி மற்ற ஒருவரும் பாவங்களுக்காகச் சிலுவையிலே மரிக் கவில்லை. வெள்ளியோ, பொன்னோ, காளையோ அல்லது மற்ற மிருகங்களோ ஜீவிக்கிற எதுவும் நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்ய முடியாது.

கவனிக்கவும் (1 பேதுரு 1: 18-19) வசனத்தில் அழிவுள்ள வஸ்துக்களா கிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட் டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்க ளென்று அறிந்திருக்கிறீர்களே என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நமக்கு எப்படித் தெரியும் தம்மை தாமே ஒப்புக் கொடுத்தார் என்று (யோவான் 10:18ல்) சொல்யபடி ஒருவனும் அதை என்னிடத்திருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. இயேசு கிறிஸ்து வுக்கு எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. (மத்தேயு 28:18) வாசிக்கவும்.

இயேசுவை சிலுவையில் அறைவதற்குப் பிலாத்து முன்பாக நின்றபோது பிலாத்து நினைத்தான்; இயேசுவை சிலுவையில் அறையவும் அவரை விடுதலைச் செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு என்று சொன்னான். ஆனால் இயேசுவின் வார்த்தையைக் கவனிப்போம். (யோவான் 19:11) இயேசு பிரதியுத்தரமாக, பரத்தி ருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது. இயேசு கிறிஸ்து எல்லா ஜாதிக்காகவும் எல்லா ஜனங்களுக்காகவும் தம்மை ஒப்புக் கொடுத்தார் என்று இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களானால் அப்போது இரட் சிக்கப்படுவீர்கள். நீரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களில் ஒருவராக இருக் கிறீரா? என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள் (வெளிப்படுத்தல் 5:9) வாசிக்கவும்.

## இயேசு கிறிஸ்துவின் விரோதிகள் அவர் சரீரத்தைக் கல்லறையில் அடைத்து வைக்க முயற்சி செய்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் விரோதிகளாகிய பிரதான ஆசாரியனும், பரிசே யர்களும் அவர் சரீரத்தை ஒருவரும் எடுத்துக்கொண்டு போகாதபடி அதை வெகு பத்திரமாகக் காவல் செய்து கல்லறையை பத்திரமாக மூடி முத்திரையிட்டார்கள். இவ்விதமாகக் காவல் செய்து காத்திருந்ததினால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெ ழுதல் மிகவும் ஆச்சரியமான சம்பவமாக இருந்தது என்பதை 23ஆம் சரித்திரத்தில் வாசித்தபடி அற்புத காட்சி நிகழ்ந்ததைக் காண்கிறோம்.

## பார்க்க ஒவ்வாத கரங்கள்

ஏன் கல்வாரியைப் பண்டிகையாகக் கொண்டாடுகிறீர்கள்? என்று ஒரு வாபன் என்னைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டான். இது இயற்கையான ஒரு சம்பவம் இல்லையே! நினைப்பதற்கும்கூட இது பயங்கரமாயிருக்கிறதே!

இதைப்பற்றி சிந்தியுங்கள். ரோமர்களால் இந்தவிதமாகச் சிலுவையிலே அறைந்து பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டு மரிப்பது அதிக பயங்கரமானது சிலுவையை பூமியின்மேல் கிடக்கச் செய்து குற்றவாளியை அதன்மேல் கிடத்தி பெரிய ஆணிக ளால் அவர் கைகளையும், கால்களையும் அடித்து இந்தவிதமாகச் சிலுவையைப் பூமியில் குழி தோண்டி அதிலே நிறுத்தி அந்தக் குற்றவாளி சாகும்வரையிலும் தொங் கவிடுவார்கள். இந்த விதமான மரணத்தைத்தான். கிறிஸ்தவர்கள் (இராப்போஜனத் தன்று) கொண்டாடுகிறார்கள். இந்தச் சம்பவம் இயற்கைக்கு விரோதமானதுதான். இதைப் பார்த்து சகித்துக் கொள்ள முடியாது. இதை எப்படி பண்டிகை என்று அனு சரிப்பது என்றான். ஓ என் நண்பனே! என்று நான் பதில் அளிக்க முன் வந்தேன். நீங்கள் இந்த நிகழ்ந்த சம்பவத்தைக்குறித்து யோசனை பண்ணாமல் சிந்திக்கிறீர் கள். நீங்கள் சரியான கிறிஸ்துவுடன் இணைக்கப்படாமல் யாருக்காக அவர் மரித் தார் என்று சிந்திக்காமல் கேட்கிறீர்கள். நான் கேள்விப்பட்ட ஒரு சிறிய சம்பவத் தைச் சொல்லுகிறேன்.

ஒரு அழகான அம்மையார் இருந்தார். அவருடைய கைகள் அநேக வடுக்களால் பார்ப்பதற்கு பயங்கரமுள்ளதாயிருந்தது. அவருடைய சிறிய மகன் தன்னுள்ளத்திலே என்னுடைய அம்மாவின் கைகளுக்காக என்ன நேர்ந்ததோ என்று அதைப் பார்க்கக்கூட சகிக்காதவனாய் ஒருநாள் அவள் சொன்னான். அம்மா! நான் உங்களுடைய முகத்தை நேசிக்கிறேன், உங்களுடைய கண்களையும் நேசிக்கிறேன். உங்கள் கூந்தல் எவ்வளவு அழகு உள்ளதாய் இருக்கிறது. இருந்தாலும் உங்களுடைய கரங்கள் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், அதை என்னால் பார்த்து சகித்துக் கொள்ள முடியாமலும் இருக்கிறேன். ஏன் இந்தவிதமாக முறுக்கியும், கோணலுமாகவும் இருக்கிறது. தாய் சொன்னாள்; என் மகளே, கேள்! நான் கையைக் குறித்து சொல்லக்கூடாது என்று நினைப்பது உண்டு. ஆனால் இப்போது நீ தெரிந்து கொள்ளுவது நல்லது. அதாவது பத்து வருஷங்களுக்கு முன்பு அப்போது நீ ஒரு சிறிய குழந்தையாக இருந்தாய். நான் எவ்வளவாய் உன்னை நேசித்தேன் தெரியுமா! இப்போது செய்வதுபோல் அல்ல, அப்போது நீ மூன்று மாதக் குழந்தையாய் இருந்தாய். ஒருநாள் காலை அதிக வேலையாய் இருந்தேன். உனக்கு வேண்டிய தெல்லாம் செய்து, ஆகாரம் கொடுத்து, தொட்டில் கிடக்கப்பண்ணி மற்ற வேலைகளைக் கவனிக்க சமையல் அறைக்குச் சென்று அநேக நேரத்தில் உன் மேல் எல்லாக் கவனத்தையும் வைத்து உன்னிடமிருந்து ஏதாகிலும் சத்தம் வருகிறதா என்று கவனித்து வந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் தீடீர் என்று ஒருவர் கூப்பிடு கிற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அண்டை வீட்டுக்காரர் ஒருவர் என்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன். வீடு எரிகிறது; வீடு எரிகிறது என்று சத்தம் போட்டார். நான் சமையலறையிருந்து முற்றத்திற்கு ஓடி வந்தேன். அப்போது உன்னைக் கிடத்தி வைத்திருந்த அறையின்பக்கம் புகையும், ஜூவாலையுமாக இருப்பதைக்கண்டு பக்கத்து வீட்டுக்காரர் எனக்கு உதவி செய்ய ஓடிவந்தார். என்னால் பேசவோ, எதையும் செய்யவோ முடியாமல் திகைத்து நின்றேன்.

அப்போது என் எதிரில் ஒரு சால்வையைக் கண்டேன். அதை எடுத்து என்மேல் போட்டுக் கொண்டு நீ இருக்கும் அறைக்கு வந்து உன்னை நீ கிடந்த படுக்கை யோடு எடுத்து என் மார்போடு அணைத்துக் கொண்டு படிவழியாக ஓடி வந்தேன். அப்போது என் கைகள் வெந்து சதைகள் விழுந்தன. என் தலை, புஜம், மற்றும் முகம் பாதிக்கப்படவில்லை. என் கைகள் இப்படி இருப்பதற்குக் காரணம் இதுதான். இந்தச் சிறிய பெண்ணைக் குறித்து என்ன சொல்லுவோம். இவளும் இயற்கைத்தன்மைக்கு விதி விலக்கு இல்லையே. சிறுபெண் தன் தாயை இறுகப்பிடித்து அணைத்துக் கொண்டு பார்க்கச் சகிக்காத கைகளைத்தன் அழகிய பூவிரனால் தடவி, அதைத் தன் மெல்ய உதடுகளால் முத்தங்கள் கொடுத்து, தன் தாயைப்பார்த்து ஓ! தாயே உங்கள் அழகு முகத்தையும், கண்களையும், கழுத்தையும் உங்கள் அழகிய தலைமு டியையும் எவ்வளவு நேசிக்கிறேன்! இருப்பினும் இந்த அன்புள்ள கரங்களை அதை விட அதிகமாக நேசிக்கிறேன் என்றாள். கிறிஸ்துவின் மரணம் பற்றி நினைப்பது மட் டுமல்ல. அவர் கல்வாரியில் நமக்காக மரித்ததையும் நினைப்போம். (பிரஸ்பிடீரியன் கொடி)

## ஆண்டவருக்கு நாம் செய்யவேண்டியவை

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் கிறிஸ்து நம்மை மன் னிப்பார் (1 யோவான் 1:9)

நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அப்போது நாம் இரட் சிக்கப்படுவோம் (அப்போஸ்தலர் 16:31)

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத் துமாவோடும், முழு மனதோடும் தேவனில் நாம் அன்பு கூரவேண்டும் (மத்தேயு 22:37)

நாம், கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று மனுஷர் முன்பாக அறிக்கை செய்யவேண்டும். (மத்தேயு 10:32)

நம்முடைய ஜீவியம் தேவனைப் பிரியப்படுத்தக்கூடிய ஜீவியமாக இருக்க வேண்டும். (1 தெசலோனி 4-1)

## சரித்திரம்: 23, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்

ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மக தலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொ ழுது பூமி மிகவும் அதிரும்படி கர்த்தருடைய தூதன் வானத்திருந்திறங்கி வந்து, வாசருந்த கல்லைப் பூரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்திருந்தான். அவனு டைய ரூபம் மின்னல்போலவும் அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல்



மத்தேயு 28:1–10

*வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள்பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப்போய், அவர் மரித்தோரிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலேயாவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.*

*அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள். அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப்போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.*

## இயேசு கிறிஸ்து மரணத்தையும் பாதாளத்தையும் மேற்கொண்டார்

*அதனால் கல்லறையில் கிடக்கும் அனைவரும் உயிரடைவார்கள். அவர் இப்படி சொன்னார்: நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோவான் 14:19) இயேசு அவனை நோக்கி நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனென்றும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். (யோவான் 11:25,26)*

## சரித்திரம்: 24, இயேசுவின் கடைசி வார்த்தை

*பதினொரு சீஷர்களும், கலேயாவில் இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்து கொண்டார்கள்; சிலரோ சந்தேகப்பட்டார்கள். அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*



மத்தேயு 28:16–20

*நமக்கு அன்பானவர்கள் மரிக்கும்போது அவர் சொல்லும் காரியங்களை நிறைவேற்ற நாம் அதிக ஆர்வமுள்ளவர்களாய் இருக்கிறோம். அதாவது எண்ணங்களையும் ஆசைகளையும்!*

*நமக்குப் பிரியமானவர்கள் அவர்களின் மரணத்தருவாயில் விடுவிக்கும் வேண்டுகோளை நிறைவேற்ற நாம் மிகவும் பிரயத்தனப்படுகிறோம். அது போல நாம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு பரமேறிய போது கீழ்க்கண்டவாறு சொன்னார்: பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15) நீங்கள் அவருடைய இந்த கடைசி வார்த்தையை ஏற்று நடக்கிறீர்களா?*

*ஏன் நாம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். (அப்போஸ்தலர் 4-12) சொல்லுகிறது. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். நித்திய ஜீவனுக்கு இயேசு ஒருவரே நம்பிக்கையாக இருக்கிறார்.*

*(யோவான் 14:6) அதற்கு இயேசு நானே வழியும், சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று சொல்லப்பட்டிருக்கிறது நாம் பிதாவிடம் செல்ல இயேசு தான் வழியாக இருக்கி றார். கிறிஸ்துவை பின்பற்றும் உண்மையான விசுவாசிக்கு இயேசு சொனார். நீங் கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். (யோவான் 14:15) முதலாம் பிரதான கற்பனையானது அதிமுக்கியமாகும். இது நாம் செய்யவேண்டிய கடமையாகும்.*

*உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக; (மத்தேயு 22;37) மிகப் பெரிய இரண்டாம் பிரதான கற்பனை. நாம் எப்போதும் மனிதாபிமானம் உடையவர் களாய் இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மத்தேயு 22:39. உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவ்விரண்டு கற்ப னைகளிலும்,. நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கத் தரிசனங்களும் அடங்கியி ருக்கிறது என்றார். (மத்தேயு 22:40)*

## சரித்திரம்: 25, இயேசு மறுபடியும் திரும்பி வருவார்

### *அவர் வருகைக்கு அடையாளம் என்ன?*

*மத்தேயு 24-ஆம் அதிகாரம் படித்தால் வெகு தெளிவாகவும் பார்ப்பது போலவும் அவருடைய வருகையின் அடையாளங்களை அதில் காணலாம். கீழே சில வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.*

*அநேக அந்திக் கிறிஸ்துகள் எழும்பி நானே கிறிஸ்து என்று சொல் வஞ் சிப்பார்கள். இப்படிப்பட்டவர்களைப் பின்பற்றாதிருப்போம். வசனம் 24:5, 23,24,25.*

*(வனம் 7) ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். (வசனம் 8) இவைகளெல்லாம் வேதனைக்கு ஆரம்பம்.*

*(வசனம் 9) அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து உங்களைக் கொலை செய்வார்கள். நீங்கள் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள். ஏன் என்றால் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டதினால் கிறிஸ்து நமக்காகப் பூமியில் பாடுபட்டார். அதனால் நமக்கு நித்திய ஜீவன் உண்டா யிற்று. இப்போதும் நமக்கு ஒரு தருணம் கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவின் நாமத்தில் பாடுகள்பட்டு நாங்கள் உம்மை நேசிக்கிறோம் என்று காண்பிக்க!*

*(வசனம் 10) அநேக கிறிஸ்தவர்கள் இடறலடைந்து இயேசுவை இனி பின்பற்றாமல் ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து ஒருவரையொருவர் பகைப்பார்கள்.*

*அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். அவர்கள் அற்புதங்களையும், அடையாளங்களையும் காட்டி நல்ல கிறிஸ்தவர்களை யும் வஞ்சிப்பார்கள் (வசனம் 11:24)*

அநேகர் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண் கொடுத்தும் நோவாவின் நாட்களில் இருந்தது போலவும் இருப்பார்கள். (வசனம் 37–39 வாசிக்கவும்).

*மிகுந்த உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். (வசனம் 29)*

## அவர் எந்த விதமாக வருவார்?

*அவர் வருகை திடீரென்று மத்தேயு 24:27ல் சொல்யபடி மின்னல் கிழக் கிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்.*

*அவர் வானத்தில் மேகங்கள் மேலும், வல்லமையோடும் மிகுந்த மகிமை யோடும் வருவார். மத்தேயு இதைப்பற்றிச் சொல்லுகிறது (24:30வாசிக்கவும்)*

## கண்கள்யாவும் அவரைக்காணும் (வெளி 1:7)

*ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முத லாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள் ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். (1 தெச 4:16,17,18)*

*இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத் துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப் போஸ்தலர் 1:11)*

*நாம் எப்படி இயேசுவுக்காக ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர் ஒளி யிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருரோடொருவர் ஐக்கியப்பட்டி ருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்க ளையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7)*

*நீ பரலோகம் போக, உனக்கு விருப்பமா? (சங் 86:5) ஆண்டவரே, நீர் வல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். யோவான் 14-6) இயேசு தோமாவைப் பார்த்துச் சொன்னார்; நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.*

## தேவனிடம் மனம் திரும்பி அறிக்கை செய்

## நீ உன்னுடைய பாவங்களுக்காக மனங்கசந்து மனஸ்தாபப்பட்டால்

*(யோவான் 1:9) நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். இதைக் குறித்து இயேசுவிடம் ஜெபிக்கும்போது அவர் நம் ஜெபத்தைக் கேட்பார். இயேசுவை நீ பின்பற்றினால் உன் பாவக்கட்டின் சங்கியை உடைப்பதைக் காண்பாய். அவரை விசுவாசித்து உன் வாழ்க்கையிலும் ஜீவியத்திலும் ஏற்றுக் கொள். இப்போதே இயேசு உன் இருதயத்தில்* வர உன் இருதயக் கதவைத் திறந்திடு. (வெளி 3:20)*இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான். நமக்கு ஒரு நிச்சயம் இருக்க வேண்டும். நாம் அவருடையவர்கள் என்று மெய்யாகவே நாம் மனந்திரும்பி விசுவாசிக்கும்போது (ரோமர் 8:16) நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்.*

## தேவனுடைய வார்த்தைப்படிச் செய்வது

*நாம் பாவங்களை விட்டு மனந்திரும்பி பாவங்களை அறிக்கை செய்தல்.*

*நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் இரட்சகர் என்று விசுவாசித்தல்.*

*அதனால் நாம் தேவனுடைய வார்த்தையின்படி நடக்கவேண்டும். நாம் ஒளியில் நடந்து அன்றாட ஜீவியத்தில் இயேசுவைப் பின்பற்றி நடக்க வேண்டும். (1 யோவான் 1:7 படிக்கவும்.)*

## கிறிஸ்துவுக்காக தினம் தொடர்ந்து ஜீவிப்பது

*(யோவான் 8:31)ல் சொல்யபடி நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் (வசனம் 32)*

## இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறீரா?

*ஏற்றுக்கொண்டிருப்பீரானால் உங்கள் பெயரைக் கோடு இடப்பட்ட இருதயத்தில் எழுதவும்.*



இயேசுவைப்பற்றி பிறருக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குச் செய்ததையும் சொல்லுங்கள்.

## தேவன் நமக்கு உலகத்தை உண்டாக்கினார்

பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாக்ககடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.

அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும், இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும், இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.

சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று. பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக் கடவது என்றார்.

தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப் பட்சிகளையும் சிருஷ்டித்தார். தேவன் அது நல்லது என்று கண்டார்.

தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார்.

சாயங்காலமும் விடியற்காமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று, பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும் ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.

தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டு மிருகங்களையும் ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார். பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

தேவன் நம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷடித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல், தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

பின்னும் தேவன்; இதோ, பூமியின்மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும் விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது.

பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாக கொடுத்தேன் என்றார். அது அப்படியே ஆயிற்று.

அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும், விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

# தேவன் மனிதனை உண்டாக்கினார்



ஆதியாகமம் 1:26 – 31

ஜீவனுள்ள மற்ற எல்லா வற்றையும்விட மனிதன் வித்தியா சமானவன். மனிதன் மற்றெல்லா ஜீவன்களிடத்திருந்தும் மாறுபட் டவன் என்று வேதம் கூறுகிறது. 1 கொரிந்தியர் 15:39ல் இந்தப் பெரிய சத்தியத்தை, எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல, மனுஷ ருடைய மாம்சம் வேறே, மிருகங்க ளுடைய மாம்சம் வேறே, பறவை களுடைய மாம்சம் வேறே என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷன் ஜீவராசிகளுக்கு வித்தியாசமான வன் மட்டுமல்ல, அவனை ஒரு ஜீவாத்மாவாகவும் உண்டாக்கி னார். மனுஷராய் பிறந்தவர்களாகிய நாம் ஏதோ ஒரு இடத்தில் இருக்க வேண்டி யதாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகர் என்று விசுவாசிக்கி றவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. ஆனால் அவரை ஏற்றுக்கொள்ள மறுக்கிறவர் களோ நித்திய ஆக்கினைக்கு உள்ளாவார்கள் என்பதே. யோவான் 5:28,29ல் சொல் லபடி அதிர்ச்சிக்குரியது. இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென் றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்: அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும் புறப்படுவார்கள். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக நிற்கப் போகிறோம். (எபிரெயர் 9:27)சொல்லபடி அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே ரோமர் 14:10,12ல் நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன் பாக நிற்போமே. அந்தப்படி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கி றேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம் மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.

மேல் கூறப்பட்டபடி மனிதன் வித்தியாசப்பட்டவனாய் இருக்கிறான். மிருகம் மரித்தால் அதன் ஆவி புழுதியில் பூமிக்குள் திரும்புகிறது. இது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. மனிதனின் ஆவிக்கும், மிருகத்தின் ஆவிக்கும் உள்ள வேறுபாடுகளை (பிரசங்கி 3:21) ல் உயர ஏறும் மனுஷருடைய ஆவியையும், தாழப் பூமியிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதனால் மனிதனுடைய ஆவி தேவனிடம் போகிறது என்று

(பிரசங்கி 12:7) நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது.

## மனிதனுக்கு ஒரு இரட்சகர் தேவை

ரோமர் (3:23) எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி (ரோமர் 5:12) இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்துபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. (யோவான் 3:5) ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்.

தேவன் ஒரு இரட்சகரை ஆயத்தப்படுத்தினார். (ரோமர் 5:6-11) அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்து தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இரத்தத்தினாலே, இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறோம்.



தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் (யோவான் 3:16-17)

நாம் இரட்சிக்கப்படக் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவான் 3:18). அதற்கு அவர்கள்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். (அப்போஸ்தலர் 16:31)

என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 5:24)

## செய்ய வேண்டியவைகள்

விடப்பட்ட இடத்தில் கொடுக்கப்பட்ட கேள்விக்கு நீங்கள் உண்மையில் சரிதான் என்றால் ஆம் என்று பதில் எழுதவும்.

நீங்கள் ஆனந்தம் என்ற புஸ்தகத்தை வாசிக்கும்போது உங்கள் உள்ளத்தில் தேவன்தான் பேசுவதுபோல இருந்ததா? ______________________

நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடையவர்களாயிருந்து நித்திய ஜீவன் அடையவேண்டுமா? ______________________________

நீ உண்மையாகவே உன் பாவங்களுக்காகவும் உன்னுடைய தீய காரியங்களுக்காகவும் வருந்தி மனஸ்தாபப்பட்டதுண்டா? ______________________
நான் இப்பேர்ப்பட்ட பாவங்களை இனி ஒருபோதும் செய்வதில்லை என்று தீர்மானித்திருக்கிறாயா? ______________________________

உன் ஜெபத்தில் இயேசுவிடம் சொல் மனஸ்தாபப்படுகிறாயா? ______________________

நீ இயேசுவிடம் இவ்விதமாக ஜெபித்ததுண்டா? எனக்கு உள்ளான சமாதானம் வந்ததினால் என் ஜெபத்தைக் கேட்டு என் பாவங்களையும் மன்னித்தார் என்பதே. ஞாபகம் இருக்கட்டும் அவர் நமக்கு ஒரு வாக்குத்தத்தம் செய்துள்ளார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னிக்கிறவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)

கிறிஸ்துவை உன் சொந்த இரட்சகர் என்று இப்போது விசுவாசிக்கிறாயா? ______________________

தேவனுடைய உதவியால் அவரைப் பின்பற்றி அவருக்குப் பிரியமானவைகளை ஜெபித்து உன் ஜீவியத்தில் செய்கிறாயா? ______________________

நீ மற்றவர்களுக்கு உதவி செய்து அதன் மூலம் இயேசு கிறிஸ்துதான் இரட்சகர் என்று மற்றவர்களும் அறியச் செய்கிறாயா? ______________________

ஆனந்தம் என்ற புஸ்தகம் மற்றவர்களுக்கும் தேவை என்பதை அறிவாயா? ______________________

# இயேசு கிறிஸ்து மறுபடியும் வருகிறார்!!



மத்தேயு 24:44

**நீ**ங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்: ஆதலால் **நீ**ங்களும் ஆயத்தமாயிருங்கள்.ந

Read booklets online or by App
www.wmp-readonline.org

**Free — not to be sold**